මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : PRE/2024/92** **2024.09.18**

# சனாதிபதித் தேர்தல் - 2024 செப்தெம்பர் 21

## தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ள அமைதி காலப்பகுதி

வாக்கெடுப்பிற்கு நாற்பத்தெட்டு(48) மணி நேரத்திற்கு முன்னர் அதாவது 2024.09.18 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் சனாதிபதி வேட்பாளர்களின் அனைத்து பிரச்சார நடவடிக்கைகளையும் முடிவுறுத்த வேண்டும்.

அதன்படி, 2024.09.18 ஆம் திகதி நடைபெறும் இறுதி அரசியல் பிரச்சாரக் கூட்டங்களின் வீடியோ காட்சிகளையும் விபரங்களையும் 2024.09.19 ஆம் திகதியன்று ஒவ்வோர் தொலைக்காட்சி/ வானொலி அலைவரிசையின் ஒரு பிரதான செய்தியறிக்கையில் மாத்திரம் பிரச்சாரம் செய்வதற்கும், 2024.09.19 ஆம் திகதி வெளியாகும் செய்தித்தாள்களில் புகைப்படங்களையும் கூட்டங்கள் பற்றிய குறிப்புகளையும் வெளியிடுவதற்கும் செயலாற்றுமாறு அறிவிக்கின்றேன். ஒவ்வோர் அலைவரிசையோடும் செய்தித்தாளோடும் இணைந்த சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய அனைத்து சமூக ஊடக தளங்களின் நிருவாகிகளுக்கும் இந்த நிபந்தனைகள் ஏற்புடைத்தாகும். அதேபோல், இந்த இறுதிப் பிரச்சாரக் கூட்டங்கள் பற்றிய விபரங்களை பிரசித்தப்படுத்தும்போது அனைத்து வேட்பாளர்களுக்கும் ஒத்த சந்தர்ப்பம் கிடைக்கின்ற விதத்தில் செய்தித்தாள்களில் இடமொதுக்கிக் கொடுப்பதுடன், அலைவரிகளிலும் வானலை காலம் ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அறிவிக்கின்றேன்.

மேலும், 2024.09.19 ஆம் திகதி அனைத்து தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் அந்நாளுக்குரிய செய்தித்தாள் தலைப்புகளை முன்வைக்கும்போது நாழிதழ்களின் செய்தித் தலைப்பை மாத்திரம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், செய்திகள் சார்ந்த வேறெந்தக் கருத்து/ யோசனை அல்லது செய்திக்கு மாற்றமான கருத்து வெளிப்பாடொன்றை அதனை சமர்ப்பிக்கும் ஊடகவியலாளர்கள் முன்வைக்கக் கூடாது. அத்துடன், அன்றைய தினம் தாண்டி அதாவது 2024.09.20, 21 ஆம் திகதிகளில் செய்தித் தலைப்புகளை முன்வைக்கும்போதும் எந்தவோர் அரசியல் பிரச்சார செய்தியையும் கட்சியை/வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பாதிப்புக்கு உள்ளாக்கும் விதத்தில் சமர்ப்பிப்புகளை முன்வைக்காமல் இருக்குமாறு அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக அலைவரிசைகளின் தலைவர்களுக்கும் செய்திப் பிரிவுத் தலைவர்களுக்கும் செய்தி ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பீட பணிப்பாளர்களுக்கும் தலைமை பதிப்பாசிரியர்களுக்கும் அனைத்து சமூக ஊடக உரிமையாளர்களுக்கும் மேலும் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**